**தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### 1.6.1.1 நிதியற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிச் சொத்துக்களை பெற்றுக்கொள்வதன் கீழ் காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 1,129,353 ஆக இருந்த போதிலும் அதன் மூலதனமாக்கப்பட்ட பெறுமதி ரூபா 517,005 ஆக இருந்ததனால் ரூபா 612,348 தொகையான செலவு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பி வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் கம்பி வலை வேலிகளை நிர்மாணித்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 612,348 மொத்த தொகை வித்தியாசத்திற்கு காரணமாகும். இச்செலவுகள் 2024 ஏப்ரல் மாத கணக்கு பொழிப்புக்களின் மூலம் மூலதனமாக்கப்பட்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டது. | ஆண்டிற்குரிய அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 36.4 மில்லியன் பணம் செலுத்தி 2020 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட்டிருந்தும் வீட்டினை மதிப்பீடு செய்து அல்லது நிர்மாணிப்பதற்குச் செலுத்திய பெறுமதியை 2023 ஆம் ஆண்டில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிப்பதற்குச் செலுத்திய பெறுமதி 2024/04/10 ஆந் திகதி நிதியற்ற சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

#### 1.6.1.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 317 டெப் (TAB) கணனிகளுக்குரிய சிம்காட்களுக்காக 2023 யூன் மாதத்தில் மொபிடெல் கம்பனிக்கு ரூபா 468,589 | பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கும் கட்டளைகளின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு அந்த அலுவலகங்களின் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்து சிம் அட்டைகளை பயன்படுத்துபவர்கள் |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தும் இந்த சிம்காட்கள் மற்றும் 244 டெப் (TAB) கணனிகளைப் பயன்படுத்துபவர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த டெப் இயந்திரங்களின் பெறுமதிகளை திணைக்களத்தின் நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யமுடியாது என தெரிவிக்கிறேன். சிம் அட்டைகளுக்கான மாதாந்த விலைப்பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்தல் கணக்குகள் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படுவது e-Slims நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துகின்ற பிரிவின் மூலம் என்பதனால் உரிய தகவல்கள் எங்கள் பிரிவில் காணப்படுகின்றது. | தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.1.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891 இன் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், வருமானங்கள், முத்திரைகள் அல்லது பொருட்களை பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் அவ்வாறு இல்லையாயின் அரசாங்கத்தின் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது பொருட்களை வழங்குதல் சம்பந்தமாக நிருவாக ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய பிணைப்பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்படும். | ஊழியர் பிணைப் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் இலக்கம் 460 இன் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் ஏதாவது தவறுகள், குறைபாடுகள் ஏற்படுமாயின் அத்தவறுகள் உருவாகிய உடன் மற்றும் நிதி ஆண்டில் திறைசேரி ஏடுகள் தீர்த்துவைப்பதற்கு முன்னர் சரிசெய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு சரிசெய்யப்படாத தவறுகளினால் அந்த ஆண்டிற்கான கணக்குகளில் பிழையான | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 2,002,427 தொகையான பிழையான செலவு வைத்தலினை வருமானத்திலிருந்து மீளச் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. உரிய சரிசெய்தலானது பிரதேச செயலகத்தினால் கணக்கு பொழிப்புக்களினூடாக | சரியான வருமானத்தினை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தல் காட்டப்படுகின்றது. மீளாய்வாண்டில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காணிக் குத்தகை வருமானம் மற்றும் ஏனைய குத்தகை வாடகை வருமானமான ரூபா 150,083,569 தொகையினுள் மாகாண சபை வருமானத்திற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய ரூபா 2,002,427 தொகையினை பிழையாக உள்ளடக்கியதன் காரணமாக திணைக்களத்தின் உள்ளபடியான வருமானம் அத்தொகையால் அதிரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்காக காலம் எடுப்பதனால் 2023 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தினால் மேற்கூறிய சரிசெய்தலினை செய்யலாம் என திறைசேரியிடம் வாய்மொழியின் மூலம் விசாரிக்கப்பட்டது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் காணிக் குத்தகை வருமானம் மற்றும் ஏனைய நிலுவைக் குத்தகை வாடகை ரூபா 101,227,690 ஆக இருந்ததுடன் அதனுள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவைக் குத்தகை வாடகை ரூபா 47,459,534 அல்லது 47 சதவீதமாக இருந்தது. | நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வது தொடர்பாக குத்தகைதாரர்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது எனத் தெரிவிக்கிறேன். | துரிதமாக நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போது நட்டங்கள் மற்றும் பதிவழித்தல்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 100,000 நிதி ஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக நட்டங்கள் மற்றும் பதிவழித்தல்கள் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 02 மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடு ரூபா 28,133,652 ஆகும். அது வழங்கிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீத்திற்கும் 56 சதவீத்திற்கும் இடைப்பட்ட பெறுமதியினைக் கொண்டிருந்தது. | திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமையும் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யாமையும் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாகவும் இச்சேமிப்பு இடம்பெற்றுள்ளது. | நிதி ஏற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் மாதத்திற்கான மின்சார விலைப்பட்டியல்களின் ரூபா 1,743,205 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை. | இச்செலவு மீண்டுவரும் தன்மையான சேவைகளாக இருந்ததனால் அடுத்து வரும் நிதி ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்காக பொறுப்புக்களுக்கு கட்டுப்படும் இயலுமை காணப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். கொடுப்பனவு வவுச்சர்கள் தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக பதியப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | | |
| | **ரூபா** | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1645(அ) மற்றும் 1647 (அ) | - | ஒழுங்கு முறையாகவும் முறைப்படியாகவும் பூரணப்படுத்தி வாகன சம்பவக் குறிப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த தகவல்களை சம்பவக் குறிப்பு புத்தகங்களில் நாளதுவரையாக்குவதற்கு போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டது. ஓட்ட அட்டவணைகளின் பொழிப்பு மாதாந்தம் தயாரிக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு | 186,140 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்றுச் சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 186,440 ஆகும். | ஓய்வூதிய பணிக்கொடை செலுத்தியுள்ள எந்த உத்தியோகத்தரினதும் கடன் மீதியானது முற்பணங்கள் பீ கணக்கில் உள்ளடக்கப்படவில்லை என தயவாக தெரிவிக்கிறேன். | தாபன விதிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 256,074 | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 03 உத்தியோகத்தகளிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த கடன் மீதி ரூபா 256,074 ஆக இருந்ததுடன் அந்த கடன் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 161,424 மற்றும் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன் மீதி ரூபா 94,650 ஆகும். | 2024-05-31 ஆந் திகதியளவில் ரூபா 27,432 தொகை அந்த 03 கடன் மீதிகளிலிருந்தும் அறவிட்பட்டுள்ளதுடன் இன்னும் அறவிட வேண்டிய மீதி ரூபா 244,578 ஆனதுடன் அக்கடன் மீதி முடியுமான அளவு விரைவாக அறவிடப்படும் எனத் தெரிவிக்கிறேன். | நிலுவைக் கடன் மீதியை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | 321,785 | 2018 ஆம் ஆண்டு மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளில் மரணப் பணிக்கொடை வழங்கியுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய எந்த மீதியும் தமது நிறுவனங்களின் முற்பணங்கள் பீ கணக்கில் உள்ளடங்காமல் இருப்பதற்கான பொறுப்பினை நிறுவனத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 149,232 தொகையும் 01 ஆண்டிற்கு குறைந்த ரூபா 172,553 தொகையுமாக 321,785 மீதி தீர்த்துவைக்கப்படாது | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதியை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்டது. | | |
| (இ) | அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்தினால் பிரசைகள்/ சேவை நாடுனர் சாசனத்தை தயாரித்து அதனை பொதுமக்கள் பார்க்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தின் பிரசைகள்/ சேவை நாடுனர் சாசனத்தினை தயாரித்து காட்சிப்படுத்துவதனால் ஏற்படுகின்ற சிக்கல் நிலைமை மற்றும் அதற்கான ஆலோசனைகளை வேண்டி எனது LCGD/AD/15/ 50 ஆம் இலக்க 2023-11-27 ஆந் தகிதிய கடிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 குறித்த செயலுக்கான உபகட்டுநிதியை வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் இலக்கம் 371(5) இன் பிரகாரம் உப கட்டுநிதி செலுத்துகின்ற உத்தியோகத்தரினால் தமது உப கட்டு நிதி தொடர்பாக கணக்கை தீர்த்துவைத்தல் எதிரீடு சமர்ப்பிக்க வேண்டியதுடன் உரிய செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதிகள் மீளத்தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 152,000 மொத்த தொகையான கட்டுநிதிகள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்குமாறு எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்திலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 தூர நோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தெளிவான நில உரிமையை உறுதிப்படுத்துகின்ற முறைப்படியான முகாமைத்துவத்தினைப் பேணுதல் திணைக்களத்தின் ‘‘செயற்பணியாக’’ | திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குத்தகைப் பிரிவில் தற்பொழுது பேணப்பட்டு வருகின்றதாவது | காணிகள் சம்பந்தமாக நாளதுவரையாக்கிய காணி பதிவேடு அல்லது தகவல் |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தும் காணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது திணைக்களத்தில் குத்தகைக்கு வழங்குதல், காணிகளை வெளியாருக்கு வழங்குதல், அன்பளிப்பு பத்திரங்கள் வழங்குதல், குத்தகையை விடுவித்தல், குத்தகை நிவாரணம் வழங்குதல் முதலிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முறையான ஒரு நடைமுறை கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 02 ஆந் திகதி வரையும் பேணப்பட்டிருக்கவில்லை. | கோவைகளை துரிதமாக கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட தரவு முறைமை என்பதனால் சில விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கான இயலுமை இல்லாததுடன் e-slims மூலம் புதிய தரவு முறைமையை உருவாக்கித்தருமாறு வேண்டப்பட்டுள்ளது. உருமய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிகழ்கால செயற்பாடுகளின் பின்னர் தற்பொழுது குத்தகை பிரிவிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்ளீட்டினை மேம்படுத்தி குத்தகை கோவைக்குரிய தரவுகளை கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கு e-slims பிரிவு இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது. தற்பொழுது மாகாணங்களுக்கிடையிலான அலுவலகங்களுக்குரிய குத்தகை கோவைகளின் தகவல்கள் அம்முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | முறைமை பேணப்படுதல் வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து அரசாங்க அலுவகங்களினாலும் தமது நிறுவனத்திற்காக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரித்த பாதீட்டினை அமுல்படுத்துவதற்காக அடுத்துவரும் ஆண்டுகளுக்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறை ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான | அத்தியவசியமான விடயங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தினை திருத்தம் செய்யும் சந்தர்ப்பங்கள் காணப்படலாம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டம் 2023 ஒக்தோபர் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 10 மாதங்களுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 3.3 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 04 மாகாண காணி ஆணையாளர் திணைக்களங்களினாலும் மாகாணங்களுக்கிடையிலான 02 அலுவலகங்களின் மூலமும் குத்தகை வழங்கப்பட்டுள்ள 10,180 எண்ணிக்கையான கோவைகளில் e-Slims முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை 2,759 அல்லது 27 சதவீதமாகும். | உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமை மற்றும் பயிற்சியற்ற மட்டத்தில் இருத்தல் என்பன இதன் செயல்முன்னேற்றம் குறித்த மட்டத்தினால் குறைவடைந்தமைக்கு காரணமாக உள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் உரிய தெரியப்படுத்தலினை மேற்கொண்டு குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான அனைத்து தகவல்களையும் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | e-Slims முறைமைக்கு தரவுகளை நாளதுவரையாக்கு வதனை துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குத்தகை செலுத்துவதனை உள்ளடக்கிய ஏனைய செயற்பாடுகளை இணையவழி முறைமையில் மேற்கொள்வதற்கு 10 வங்கி கணக்குகளின் மூலம் அனைத்து பிரதேச செயலகங்களையும் தொடர்புபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த e-Slims முறைமையானது தற்பொழுது 10 ஆண்டுகள் கடந்திருந்தும் நிர்ணயிக்கப்பட்டவாறு குத்தகை சிபாரிசுகளை வழங்கி குத்தகை அங்கீகாரத்தினை வழங்குதல் மற்றும் குத்தகை செலுத்துதலினை இணையவழி முறைமையின் மேற்கொள்வதற்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முடியாதிருந்தது. | தற்பொழுது குத்தகை சிபாரிசினை வழங்கி குத்தகை அங்கிகாரத்தினை வழங்கும் நடைமுறைக்குரிய வேலைகளின் நடைமுறையானது e-Slims முறைமையினூடாக அமைச்சு வரை மேற்கொள்ளும் இயலுமை வழங்கப்பட்டுள்ளது. குத்தகை செலுத்தலினை இணையவழி முறைமையில் மேற்கொள்ளுதலானது 2013 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதல்ல. இது நாட்டில் உருவாகிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பொதுமக்களுக்கு மிகவும் சினேகபூர்வமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் குறிக்கோளில் புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி இணையவழி முறைமை உள்ளடங்கலாக மாற்றுவழி முறைமையை பயன்படுத்தியும் பாதுகாப்புடனும் | தாமதமின்றி தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் புதிய நடைமுறையினைத் தயாரிக்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டிருந்தது. | |

**3.4 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் இலக்ககிடப்பட்ட தரவுச் செயற்பாட்டு செயல்திறன் அறிக்கைத் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 5,000 அனுமதிப் பத்திரங்களும் 14,000 அன்பளிப்பு பத்தரங்களும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 722 அனுமதிப்பத்திரங்களும் 6,367 அன்பளிப்பு பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் செயன்முன்னேற்றம் முறையே 14 சதவீதம் மற்றும் 45 சதவீதமாக இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் 848 அனுமதிப்பத்திரங்களும் 6,367 அன்பளிப்பு பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவை முறையே 17 சசதவீதமும் 45 சதவீதமுமாகும். | திட்டமிட்டவாறு அனுமதிப்பத்திரங்களும் அன்பளிப்பு பத்திரங்களும் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 70,000 காணிகளை தகவல் முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளடக்கப்பட்டுள்ள காணித்தகவல்களின் எண்ணிக்கை 20,492 அல்லது 30 சதவீத பெறுமதி என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் காணிப்பதிவேடு தொடர்பாக தரவு முறைமைக்குள் உள்ளடக்குதல் இடம்பெற்றிருக்காததுடன் அரசாங்கத்தின் காணிகளை அடையாளங்காணல் மற்றும் அது தொடர்பான தரவுகளை முறைமைப்படுத்துதல் பிரதேச செயலகங்களின் ஒரு பொறுப்பாக உள்ளதனால் அதற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் e-Slims பிரிவினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. காணிக் கடமைகளை மேற்கொள்ளலினை கட்டாயப்படுத்துதல் என்ற தலைப்பில் 2022-01-31 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்கதத்தின் காணிப் பதிவேடு தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்க காணிகள் முகாமைத்துவ தகவல் முறைமை செயற்திட்டத்தினை 05 ஆண்டுகளில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டு தற்பொழுது 10 ஆண்டுகள் கடந்திருந்தும் கணக்காய்வுத் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் புதிய ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல், ஊழியர்கள் இடம்மாறுதல், ஊழியர்கள் ஓய்வுபெற்றுச் செல்லல் அல்லது முழு நேர ஊழியர்கள் இதற்காக ஒதுக்கீடு செய்யப்படாமைமயின் காரணமாக தொடர்ச்சியாக முறைமை சார்ந்த பயிற்றுவிக்கும் நிக்ழ்ச்சித்திட்டங்களை நடாத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே அதற்கான ஒரு தீர்வாக பயிலுனர்களை பயிற்றுவிக்கும் ஒரு குழுவினை தயார்படுத:துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட தரவுகளை நிறைவேற்றும் உச்ச அளவினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயலாளரின் 05/2022 ஆம் இலக்க 2022 ஏப்ரல் 04 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் ஆதனங்கள் காணாமல் போகுதல் மற்றும் துஸ்பிரயோகம் செய்வதனைத் தவிர்ப்பதனைப் போல அரசாங்கத்தின் ஆதனங்களை உச்ச அளவு வினைத்திறனாக பயன்பாட்டிற்கு எடுத:துக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் அனைத்:து நிதியற்ற சொத:தக்களும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு பேணப்படுவதற்கான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளதுவரையாக்கி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திடம் மொத்தமாக 407 உத்தியோகபூர்வ இல்லங்களும் சுற்றுலா விடுதிகளும் காணப்படுவதுடன் அவற்றில் 399 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்டிருந்தும் 2023 | இதுவரை மதிப்பீடு செய்யப்பட்டிருக்காத உத்தியோகபூர்வ இல்லங்களை மதிப்பீடு செய்தலானது மதிப்பீட:டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வரை அண்ணளவான மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக 03 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்து மதிப்பீட்டு அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு மாகாணங்களுக்கிடையிலான / உதவி காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் மஹியங்கனை, கந்தளை, மொனராகலை ஆகிய அலுவலகங்களிடமிருந்து தற்பொழுது அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. | உத்தியோகபூர்வ இல்லங்களை மதிப்பீடு செய்து நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கும் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து உச்ச அளவு வினைத்திறன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களாக சிகாஸ் கணனி முறைமையில் 247 உத்தியோகபூர்வ இல்லங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் மிகுதியான 152 உத்தியோகபூர்வ இல்லங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்களின் கீழ் அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரசாங்கத்தின் காணிகளின் அளவு எவ்வளவு என்பது திணைக்களத்தினால் இதுவைர அடையாளங் ககாணப்பட்டிருக்காததுடன் பதிவேடுகளின் பிரகாரம் தற்பொழுது காணப்படுகின்ற காணிகளின் அளவு எவ்வவு என்பதனை அடையாளங் காண்பதற்கதாக காணகள் சம்பந்தமான தகவல்கள் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு E-Slims முறைமையில் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு நடைமுறையினைத் தயாரிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 25 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க காணிகளின் அளவினை அடையாளங் கண்டு அது தொடர்பான தரவுகளை முறைமைக்குள் உள்ளடக்குதலானது உரிய பிரதேச செயலகங்களின் பொறுப்பானதுடன் அதற்குத் தேவையான பயிற்றுவித்தல் விடயத்திற்றுப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் குடியேற்ற காணி உத்தியோகத்தர்களுக்கு இன்னும் வழங்கி காணிகள் தொடர்பான தகவல்கள் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு முறைமையின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | அரசாங்கத்தின் காணிகளை இனங்கண்டு அத்தரவுகள் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிலுவை குத்தகை பெறுமதி ரூபா 101,227,690 ஆக இருந்ததுடன் அவற்றில் மாகாணங்களக்கிடையிலான 08 அலுவலகங்கள் தொடர்பான 03 ஆண்டுகளை மிகைத்த நிலுவைக் குத்தகை ரூபா 47,459,534 ஆகும். அவ்வாறே காணிகளை குத்தகைக்கு வழங்கிய தரப்பினர்களின் பெயர், குத்தகைக்கு வழங்கிய திகதி, காணியின் அமைவிடம் குத்தகைக்கு வழங்கியுள்ள காணியின் அளவு | 6000 குத்தகை கோவைகளுக்கு மட்டுப்படுத்திய ஆளணியாகும். அவ்வாறே எதிர்காலத்தில் மாகாணங்களுக்கிடையிலான அலுவலகங்களில் காணி ஆணையாளர்களையும் உதவி காணி ஆணையாளர்களையும் அழைத்து 06 மாதங்களுக்கு ஒரு தடவை நிலுவை குத்தகையை அறவீடு செய்யும் செயன்முன்னேற்றத்ததை கலந்துரையாடுவதற்கும் | தாமதமின்றி தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்டவாறு குத்தகை அறவிடப்படாமை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | குத்தகை செலுத்தாத குத்தகைதாரர்கள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் முதலாவது கூட்டத்தினை மே 10 ஆந் திகதி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தின் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைக் குத்தகை கோவைகளின் எண்ணிக்கை 550 இற்கு அண்மித்ததாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவைக் குத்தகைகள் அறவிடப்படாமை சம்பந்தமாக 10 கோவைகளுக்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | இன்றுவரை சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டப் பிரிவிற்கு 149 கோவைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இக்குத்தகைதாரர்களுக்கு வழக்கு தாக்கல் செய்வது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் பல தடவைகள் நடாத்தப்பட்டன. அவ்வாறே ரூபா 100,000 இற்கு குறைந்த நிலுவைக் குத்தகைப் பணம் காணப்படுகின்ற கோவைகள் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவீடு செய்ய முடியாத கோவைகள் சம்பந்தமாக தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் முனசிங்ஹகொட கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொல்லச்சதெனிய கிராமத்தில் அமைந்துள்ள 4040 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டிலுள்ள காணியில் 2.932 ஹெக்டயர் காணி 4/10/26617 ஆம் இலக்க குத்தகை கோவையின் கீழ் சர்வதேச விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்காக இலங்கை கிரிகட் நிறுவனத்திற்கு வருடாந்த குத்தகையாக ரூபா 230,000 தொகைக்கு 2009 மே 06 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருந்தும் இக்காணிக்காக கணக்காய்வுத் திகதியான 2023 திசம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகைப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இக்குத்தகைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் சம்பந்தமாக 2018-03-11 ஆந் திகதி காணி அமைச்சிடமிருந்து ஆலோசனைகள் கேட்க்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய ஆலோசனைகளின் அடிப்படையில் மீண்டும் குத்தகை உறுதி வரைபாக்கப்பட்டு 2021-02-01 ஆந் திகதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வரைபு கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் கௌரவ சனாதிபதி மாற்றமடைந்ததன் அடிப்படையில் பெயர் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளதனால் மீண்டும் | குத்தகைப் பத்திரத்தினை வழங்குவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குத்தகை உறுதி வரைபு தீருத்தம் செய்யப்பட்டு 2022-11-02 ஆந் திகதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது 2022-12-05 ஆந் திகதி எனக்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனினும் குத்தகை உறுதி வரைபின் சரியான இடத்தில் குத்தகைதாரர் கையொப்பம் வைத்திருக்காததனால் மீண்டும் குத்தகை உறுதியின் வரைபு தயாரிக்கப்பட்டு கையொப்பம் இடுவதற்காக இந்த அலுவலகத்திற்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் வருகைதராமையின் காரணமாக மீண்டும் 2024-02-13 ஆந் திகதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மஹியங்கன (மாகாணங்களுக்கிடையே) காணி அலுவலகத்திற்குச் சொந்தமான கண்டி மாவட்டத்திலுள்ள மினிப்பே பிரதேச செயலகப் பரிவில் ஹசலக நகரத்தில் அமைந்துள்ள 298 ஆம் இலக்க திட்ட வரைபடத்தில் 549 ஆம் இலக்க காணித்துண்டின் 07 பேச்சர்ஸ் காணி வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகை இலக்கம் 4/10/40727 இன் கீழ் ஒரு வியாபரிக்கு 2014 செப்தெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகையை திருத்தம் செய்வதற்கு உட்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் குத்தகைதாரருக்கு குத்தகைப்பத்திரம் வழங்கப்படாதிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை குத்தகைப் பணம் ரூபா 624,000 என கோவைகளைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | இக்காணி இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்குச் சொந்தமான காணி என்ற விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு டெலிகொம் நிறுவனத்தினால் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் 2017 ஆம் ஆண்டின் போது 19845 எல் ஆம் இலக்க வழக்கு ஹேரத் முதியன்சலாகே ரஞ்சித் பண்டார ஹேரத் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் குத்தகைப் பணம் அறவீடு செய்தல் 2017 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. காணியின் உரிமையாளர் அரசாங்கம் என திட்ட வரைபட காணித்துண்டு விபரப் பட்டியலின் மூலம் அவதானிக்கப்பட்டதனால் இந்த வழக்கின் எதிராளியாக பங்குபற்றி காணியின் உரிமையை உறுதிப்படுத்துமாறு காணி ஆணையாளர் மஹியங்கன இற்கு ஆலோசனை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி குத்தகைப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கண்டி மினப்பே பிரதேச செயலகப் பிரிவில் உடத்தாவ கிராமத்தில் அமைந்துள்ள அ.கு.பி 08 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 814 ஆம் இலக்க | கண்டி மாவட்டத்தின் மினிப்பே பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 4/10/16292 ஆம் இலக்க கோவை தொடர்பாக | நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | காணித்துண்டின் 1.214 ஹெக்டயர்களைக் கொண்ட காணி 2021 மார்ச் 16 ஆந் திகதியிலிருந்து 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகையை திருத்தம் செய்யும் அடிப்படையின் கீழ் ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் காணி ஆணையாளர் நாயகத்தின் 4/10/16292 ஆம் இலக்க 2011 நவம்பர் 23 ஆந் திகதிய கடித்தின் அங்கீகாரத்தின் கீழ் ஒரு தனியார் கம்பனிக்கு உபகுத்தகைக்கு வழங்கியிருந்தது. எவ்வாறியினும் உபகுத்தகைக்கு பெற்றுக்கொண்ட நிறுவனத்தினால் குத்தகை செலுத்தாது விடப்பட்டிருந்ததுடன் 2020, 2021 ஆகிய இரண்டு ஆண்டுகள் தொடர்பான நிலுவை குத்தகைப் பணத்திற்காக அறவிடப்படுகின்ற 10 சதவீத வட்டிப் பணத்தையும் பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவைக் குத்தகைப் பணம் ரூபா 2,465,040 என அவதானிக்கப்பட்டது. | இன்றுவரை நிலுவைப் பணத்தில் ரூபா 1,907,760 தொகை 2024-03-20 ஆந் திகதி மஹியங்கனை மாகாணங்களுக்கிடையிலான காணி ஆணையாளருக்குச் செலுத்தப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹர பிரதேச செயலகப் பிரிவில் லுனுகம்வெஹர புதிய நகர் கிராமத்தின் அ.கு.பி 03 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 7061 1/3 ஆம் இலக்க காணித்துண்டில் காட்டப்படுகின்ற 0.110 ஹெக்டயர் காணி குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக 2019 செப்தெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து 4/10/68540 ஆம் இலக்க குத்தகையின் கீழ் குத்தகைதாரருக்கு வருடாந்த குத்தகைப் பணம் ரூபா 48,720 வீதம் குத்தகை வழங்கப்பட்டிருந்தும் குத்தகைக்கு வழங்கிய ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்ணயிக்கப்பட்ட குத்தகையான ரூபா 243,600 செலுத்தப்பட்டிருக்கவில்லை. | திருமதி ஹெட்டி ஆராய்ச்சிகே சுனீதா சாந்தனி அவர்களின் பெயரில் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக சிபாரிசு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் 2022-01-31 ஆந் திகதி கிடைத்து 2022-03-24 ஆந் திகதி காணியை ஒப்படைத்தல் இடம்பெற்றது. 2019 ஆம் ஆண்டிலிருந்து குத்தகை அங்கீகாரம் கிடைத்திருந்தும் காணிக்குரிய மதிப்பீடு 2023-03-01 ஆந் திகதியே கிடைத்துள்ளது. அதற்கிணங்க தெபரவெவ காணி ஆணையாளரினால் குத்தகைதாரருக்கு குத்தகைப் பணத்தை செலுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2024-01-17 ஆந் திகதி ரூபா 194,880 பணம் செலுத்தப்பட்டது. | நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹர பிரதேச செயலகப் பிரிவில் வீரவில் புதிய நகரத்தின் 830003 ஆம் இலக்க எல்லைப் படத்தின் 112 ஆம் இலக்க காணித்துண்டில் 0.1040 ஹெக்டயர் காணி | எல்.வை.நிஹில் அவர்களின் பெயரில் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக சிபாரிசு செய்து அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகாரம் | நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்காக தாமதமின்றி தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகைதாரருக்கு 4/10/40305 ஆம் இலக்க குத்தகை கோவையின் மூலம் 2012 யூன் 07 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் வரைக்கும் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 18,080 வருடாந்த குத்தகைப் பணத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு அதற்காக அறவிட வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 216,960 ஆகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகைக்கு வழங்கி 11 ஆண்டுகள் கடந்திருந்தும் இன்றுவரை எந்த குத்தகைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கிடைத்துள்ளது. குத்தகைதாரருக்கு குத்தகைப் பணத்தை செலுத்துமாறும் அவ்வாறு செலுத்தவில்லையாயின் சிவில் வழக்கு ஒழுங்கு விதிக்கோவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய வேண்டி ஏற்படும் என 2022-03-24 ஆந் திகதி சட்ட உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் ஒரு தடவை பதில் கிடைக்காததன் காரணமாக 2023-11-06 ஆந் திகதிய கடித்தின் மூலம் 2023-12-31 ஆந் திகதிக்கு முன்னர் குத்தகைப் பணம் செலுத்தப்பட்டவில்லையாயின் குத்தகை அங்கீகாரத்தினை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படும் என குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டது. 2024-02-12 ஆந் திகதி குத்தகைதாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுணுகம்வெஹர பிரதேச செயலகப் பிரிவின் லுனுகம்வெஹர புதிய நகரத்தில் அ.கு.பி 03 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 5655 ஆம் இலக்க காணித்துண்டில் 0.013 ஹெக்டயர் காணி வணிக நடவடிக்கைகளுக்காக 2004 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் வரை ஐந்து ஆண்டுகளுக்கு ஐந்து ஆண்டுகள் குத்தகையை திருத்தும் அடிப்படையின் கீழ் 4/10/19693 ஆம் இலக்க குத்தகையின் மூலம் குத்தகைதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய பணம் ரூபா 1,069,140 ஆக இருந்த போதிலும் அப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | திஸ்ஸ ஆரிதாஸ அவர்களின் கனங்கே லியனகமகே பெயரில் குடியிருத்தல் நடவடிக்கைகளுக்காக சிபாரிசு அனுப்பிவைக்கப்பட்டதுடன் அதற்காக குத்தகை அங்கீகாரம் கிடைத்துள்ளது. குத்தகைதாரர் குத்தகையை செலுத்தவில்லை என்பதனால் குத்தகை அங்கீகாரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெபரவெவ காணி ஆணையாயரினால் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க 2023-09-27 ஆந் திகதிய கடித்தின் மூலம் 2023-11-10 ஆந் திகதிக்கு முன்னர் குத்தகை செலுத்தப்படவில்லையாயின் குத்தகை அங்கீகாரத்தினை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படும் என குத்தகைதாரருக்கு | -மேற்படி-- |

| | | | |
|---|---|---|---|
| | | தெரியப்படுத்தியிருந்ததுடன் அத்திகதிக்கு முன்னர் குத்தகை செலுத்தப்படவில்லையாயின் எனக்கு அறிக்கையிடுமாறு தெபரவெவ காணி ஆணையாளருக்கு 2024-02-14 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டது. இன்று வரை பதில் இல்லாததனால் நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக உரிய ஆவணங்களை அனுப்பிவைக்குமாறு 2024-04-01 ஆந் திகதி தெபரவெவ காணி ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஐ) | அமைச்சரவை அங்கீகாரமின்றி அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அரசாங்க காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை (E-Slim) இனூடாக சுயமாக மேற்கொண்டு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக இத்தகவல் முறைமையை பேணுவதனை குறிக்கோளாகக் கொண்டு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்துடன் அமுல்ப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் காணி முகாமைத்துவ முறைமை (E-Slim) 2016 ஆம் ஆண்டின் போது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் அதற்காக செலவுசெய்யப்பட்ட தொகை ரூபா 119.6 மில்லியானகவும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தினை 05 ஆண்டுக்குள் முடிவுறுத்துவதற்கு மதிப்பிடப்பட்டு முறைமையின் பராமரிப்பு, சேவை செய்தல் நடவடிக்கை மற்றும் மேம்படுத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் 2019 யூலை 12 ஆந் திகதியிலிருந்து 2022 யூலை 11 ஆந் திகதி வரையான 03 ஆண்டுகளுக்காக வருடாந்தம் ரூபா 4,950,000 வீதம் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2013 ஆம் | E-Slims முறைமையானது 2016 ஆம் ஆண்டின் போது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் E- அரசாங்க கொள்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு ICTA நிறுவனத்தின் மூலம் ஆரம்பித்து காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2011 ஆம் ஆண்டின் போது மேல் மாகாணத்தை இலக்காகக் கொண்டு காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை என்பதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்க காணித்தகவல் மற்றும் முகாமைத்துவ முறைமைக்கான பெறுகை நடவடிக்கை தொடங்கப்பட்டதானது இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினாலாகும். அராயா பிஸ்னஸ் சொலுசன் தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து முறைமையின் முதலாவது கட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கை மற்றும் பராமரிப்பு நடவடிக்கையை நிறைவேற்றி 2013-04-01 இலிருந்து 2014-03-31 வரையான கால எல்லைக்காக நேரடி ஒப்பந்த | திட்டமிடப்பட்டு E-Slim முறைமைக்காக செலவு செய்யப்பட்ட கிரயத்திற்கு நேரொத்ததாக முறைமையின் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் வேண்டும். |

ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை செலவு செய்யப்பட்டுள்ள மொத்த செலவு ரூபா 193,086,520 ஆக இருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 25 ஆந் திகதி வரையும் அந்த நடவடிக்கையானது அமுல்ப்படுத்தும் நிலைமைக்கு மாற்றி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

முறைமையினைப் பின்பற்றி பெறுகை நடவடிக்கை அமுல்ப்படுத்தப்பட்டன. திணைக்கள பெறுகை குழுவின் தெரியப்படுத்தலின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட விசேட குழுவினாலும் 2018-12-31 ஆந் திகதிய அறிக்கையின் மூலம் முன்னைய ஆண்டில் உடன்படிக்கை செய்த முறைமைக்குரிய பராமரிப்பு மற்றும் சேவை செய்தல் நடவடிக்கையானது அத்தனியார் கம்பனியை தெரிவுசெய்வதற்கு எதிர்ப்பினை காட்டியிருக்கவில்லை எனபதனாலாகும். உடன்படிக்கை செய்யும் காலம் முன்கொண்டு வரப்பட்டதுடன் 2019-07-12 ஆந் திகதிக்குப் பின்னர் அடுத்துவரும் காலத்திற்காக பொதுத்திறைசேரியின் ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தரினைச் சந்தித்து ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.5 மற்றும் 3.6 ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் இது போன்ற கணனி முறைமையின் மூலக்குறியீடு (Source Code) மற்றும் எல்லைப் பராமரிப்பு (Domain) என்பவற்றினை உருவாக்கிய நிறுவனத்திடமே நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் சேவையாக பராமரிப்பு மற்றும் சேவை செய்தல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானது எனவும் அது மிகவும் நடைமுறைச் சாத்தியமானது எனவும் தெரிவித்து வாய்மொழி மூல அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்கூறிய நிறுவனத்துடனே மீண்டும் உடன்படிக்கை செய்வது தொடர்பான பெறுகை நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 25 ஆந் திகதிக்குப் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்

| | | | |
|---|---|---|---|
| | | குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பெறுகைக்குழு உரிய குழுவினை ஒரு ஆண்டு காலத்திற்கு கால நீடிப்பு செய்துள்ளது. | |
| (ஒ) | E-Slims முறைமையின் மூலம் அரசாங்க காணிகளை அடையாளங்கண்டு அக்காணிகளில் வெளியாருக்கு வழங்கிய மற்றும் வெளியாருக்கு வழங்கப்படாத காணிகளின் புள்ளவிபரங்கள் 2022 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே 68,014 மற்றும் 10,423 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பூகோள தகவல் விஞ்ஞான தொழில்நுட்பத்தினூடாக படம் வரையப்பட்ட காணிகளுக்காக முறைமையினுள் இதுவரை ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த முறைமை ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 10 ஆண்டுகள் கடந்திருந்தும் மாகாண, மாவட்ட அல்லது பிரதேச செயலக மட்டத்தில் ஒட்டுமொத்த அரசாங்க காணிகளின் அளவு மற்றும் அவற்றிலிருந்து வெளியாருக்கு வழங்கியுள்ள அல்லது வழங்கப்படாத அளவு உறுதியாக அடையாளங் காணப்படவில்லை. | பூகோள தகவல் விஞ்ஞான தொழில்நுட்பத்தினூடாக காணிகள் படம் வரையப்பட்டு முறைமக்கு தரவு ஏற்றம் செய்யும் இயலுமையானது முறைமையிடம் தற்பொழுது காணப்படுவதுடன் வடமாகாண காணிகளின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்கையில் இந்த வசதிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது என அடையாளங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பான புதிய உளீட்டினை நாளதுவரையாக்கும் நடவடிக்கையானது அராயா பிஸ்னஸ் சொலுசன்ஸ் தனியார் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டு தேவையான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. e-Slims முறைமையின் குறிக்கோளானது அரசாங்க காணிகளின் முகாமைத்துவத்தினை டிஜிடல் முறைமைக்கு உட்படுத்தி நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுத்தல் என்பதனால் இது அலுவலக நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட முறைமையாகும். அதற்கிணங்க பிரதேச செயலகங்கள், மாகாண மற்றும் மாகாணங்களுக்கிடையிலான காணி ஆணையாளர் அலுவலக மட்டத்தில் முறைமைக்கு தரவுகளை உட்படுத்தியதன் பின்னர் அதனை தரவு களஞ்சியமாக பயன்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது. | படம்வரையக்கூடிய காணிகளுக்காக முறைமையினைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | ஹம்பாந்தோட்டை, மினுவாங்கொட, மஹியங்கன, திஸ்ஸமகாராம, குருனாகல் ஆகிய பிரதேச | பதில் வழங்கப்படவில்லை. | காணிகளை வழங்குதல் சரியாக மேற்கொள்ளப்படுத |

| | | | |
|---|---|---|---|
| | செயலகங்கள் தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் வரை மினுவாங்கொட 19 காணித்துண்டுகள், திஸ்ஸமகாராம 10,786 காணித்துண்டுகள், குருனாகலிலிருந்து 05 ரூட் 20 பேச்சர்சஸ் காணி அடையாளம் காணப்பட்டு அக்காணிகளில் முறையே 19 காணித்துண்டுகள், 6,841 காணித்துண்டுகள் மற்றும் 05 ரூட், 20 பேச்சர்ஸ் காணி வெளியாருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மினுவாங்கொட மற்றும் குருனாகல் பிரதேச செயலகங்களின் மூலம் முறையே 80 பேச்சர்ஸ், 05 ரூட் 20 பேச்சர்ஸ்களாக குடியிருப்பு நோக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் குருனாகல் பிரதேச செயலகத்தில் 05 ரூட் 33 பேச்சர்ஸ் காணியில் அதிகாரமற்று குடியிருக்கும் நபர்களுக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் ஏனைய 03 பிரதேச செயலகங்களின் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | ல் வேண்டும். |
| (ஔ) | வணிக அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்காக குத்தகை நிவாரணம் வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு மத்தியில் 2021 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதிய 2020/06(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அதற்குரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நீண்டகால குத்தகை அடிப்படையில் அரசாங்க காணிகளைப் பெற்றுக்கொண்டுள்ள குத்தகைதாரர்களுக்காக குத்தகை நிவாரணத்தினை வழங்குவதன் கீழ் குத்தகை நிவாரணத்திற்கு தகைமையுள்ள குத்தகைதாரர்களுக்கான குத்தகைப் பணத்தை கணக்கீடு செய்யும் போது இரண்டாவது குத்தகைக் காலம் ஆரம்பிக்கின்ற திகதியிலிருந்து அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய 2020 நவம்பர் 16 ஆந் திகதி வரை இரண்டாவது குத்தகை காலம் தொடர்பாக எடுக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைப் பணத்தை சரியாக கணிப்பிட்டு அறவீடு செய்ய வேண்டிய போதிலும் அதற்கு முரணாக | அனுராதபுரம் கிழக்கு நுவரகமபலாத பிரதேச செயலகத்தின் 08 வணிக குத்தகைதாரர்களினால் அவர்களின் இரண்டாவது குத்தகை காலம் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2017/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாவது குத்தகை கால தொடக்கத்தில் குத்தகைப் பணத்தை கணிப்பீடு செய்வதற்காக நிவாரணத்தை வழங்குமாறு வேண்டிக் கொண்டதற்கு இந்த குத்தகை நிவாரணத்தை இந்த குத்தகைதாரர்களுக்கு வழங்குமாறு அமைச்சு செயலாளரிடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. அதற்கிணங்க இந்த குத்தகை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2024-02-03 மற்றும் 2024-03-05 ஆந் திகதிய தேசிய கணக்காய்வு | தாமதமின்றி இழக்கப்பட்டுள்ள குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அனுராதபுரம் கிழக்கு நுவரகம பலாத பிரதேச செயலகத்திற்கு விலாசமிடப்பட்ட 2022 நவம்பர் 10 ஆந் திகதிய 4/10/பொது/ குத்தகை நிவாரணம் (L2) இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் கிழக்கு நுவரகம பலாத பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் 08 குத்தகை கோவைகள் சம்பந்தமான குத்தகைகள் அறவிடப்பட வேண்டிய முறைமையை தெரிவித்து அனுப்பியிருந்ததனால் அரசாங்கத்திற்கு ரூபா 70,518,510 தொகையான குத்தகை இழப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் வணிக அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் கோவைகளுக்கு மத்தியில் மேற்கூறிய சுற்றறிக்கையில் குறிப்பிட்ட இரண்டாவது குத்தகை காலம் ஆரம்பிக்கின்ற 82 நீண்டகால வணிக ரீதியான குத்தகை கோவைகள் கனாணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டதுடன் காணி ஆணையார் நாயகத்தின் 2022 நவம்பர் 10 ஆந் திகதிய 4/10/பொது/குத்தகை நிவாரணம் (L2) இலக்க கடித்தின் மூலம் 08 குத்தகை கோவைகளுக்கு மாத்திரம் சுற்றறிக்கைக்கு புறம்பாக குத்தகை நிராரணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததனால் மேற்கூறிய 82 குத்தகை கோவைகளில் 74 குத்தகை கோவைகளின் குத்தகைதாரர்கள் குத்தகையினை செலுத்துவதற்கு அக்கறையின்மையை ஏற்படுத்தும் ஆபத்து ஏற்படலாம் என மேலும் அவதானிக்கப்பட்டது. | அலுவலக கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் இக்குத்தகை நிவாரணத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய தேசிய வருமானம் இழ்கப்பட்டுள்ளது என்பதனால் 2020/6(1) ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க மீண்டும் குத்தகையை அறவிடுமாறு எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த குத்தகையை அறவீடு செய்வது சம்பந்தமாக 2024-04-05 ஆந் திகதி அமைச்சு செயலாளரினால் விசாரிக்கப்பட்டுள்ளது. |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் மனிதவளங்கள் முகதாமைத்துவம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணியினர் தொடர்பான தகவல்கள் கீழே | | |

தரப்படுகின்றன.

| | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 95 | 37 | 58 |
| மூன்றாம் | 38 | 04 | 34 |
| இரண்டாம் | 660 | 517 | 143 |
| ஆரம்ப | 140 | 95 | 45 |
| | ....... | ... | ...... |
| மொத்தம் | 933<br>....... | 653<br>......... | 280<br>...... |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | | | |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் சிரேஷ்ட ஆளணியில் 58 ஆகவும், மூன்றாம் மட்ட ஆளணியில் 34 ஆகவும் இரண்டாம் மட்ட ஆளணியில் 143 அகவும் ஆரம்ப மட்ட ஆளணியில் 45 ஆகவும் ஒட்டுமொத்த வெற்றிடம் 280 ஆகக் காணப்பட்டது. | பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்கள், 06 ஆக மாற்றப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க 51 நில அளவை உத்தியோகத்தர்கள் காட்டப்பட்டுள்ளனர். 135 குடியேற்ற உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்காக 54 உத்தியோகத்தர்கள் திறந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு அந்த வெற்றிடங்களுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திணைக்கள மயப்படுத்தப்பட்ட 21 வேலை அத்தியட்சகர்கள் பதவியில் 13 பதவிகள் நிறுத்தப்பட்டு மிகுதியாகசக் காணப்படுவது 08 வேலை அத்தியட்சகர் பதவிகள் மாத்திரமாகும். ஆரம்ப சேவை தரங்களின் வெற்றிடங்களுக்காக 04 பல்நோக்கு அபிவிருத்தி | வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது தேவைக்கு இணங்க ஆளணியினரைத் திருத்தம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உதவி உத்தியோகத்தர்களை சாரதிகளாகவும் 07 அலுவலக செயற்பாட்டு உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களமயப்படுத்தப்பட்ட நியமனங்களுக்காக 04 உத்தியோகத்தர்களுமாக 15 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். | |
| (ஆ) | திணைக்களத்தில் 260 அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் உள்ளபடியான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 318 ஆக இருந்ததனால் அந்த 58 பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. | அங்கீகரித்த MN 4 தரத்தில் 60 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (காணி) பதவிகள் மற்றும் 200 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவிகளுமாக மொத்த பதவிகளின் எண்ணிக்கை 260 ஆக இருந்ததுடன் ஊழியர் தேவைப்பாட்டின் அடிப்படையில் இன்னும் 82 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை அங்கீகரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. சேவையில் ஈடுபட்டுள்ள முழு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 309 ஆனதுடன் மேலும் 08 உத்தியோகத்தர்கள் இன்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவியினை வகிக்கின்றனர். அவர்களுக்கு மத்தியில் 07 நபர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு வேண்டிக் கொண்டிருந்தும் ஒரு உத்தியோகத்தர் இன்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவியினை வகித்து வருகின்றார். எனவே 316 பதவிகளின் பதவிப் பெயர்களை அபிவிருத்தி உதவியாளராகவும், ஒரு பதவியை அபிவிருத்தி உதவியாளராகவும் திருத்துமாறு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கூறிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்த மிகைகள் இல்லாமல் | காணப்படுகின்ற ஆளணியினை மீளாய்வு செய்தல் வேண்டும். |

போய்விடும் என தெரிவிக்கிறேன்.